# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

MCOP.48 of 2025

Civil Case No :: Pw -1

Name :: சங்கரலிங்கம்

Father's/Husband's Name ::

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 30.06.2026

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். ம.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1) களக்காடு காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ-1 ஆகும்.

2)காயச்சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆகும்.

3) பார்வை மகஜர் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-3 ஆகும்.

4) வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா-ஆ.4 ஆகும்.

5) விபத்தில் சம்மந்தப்பட்ட TN 72 BB 2505 என்ற காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ-5 ஆகும்.

6) விபத்தில் சம்மந்தப்பட்ட TN 72 AZ 2490 என்ற மோட்டார் சைக்கிளின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ-6 ஆகும்.

7) குற்றப்பத்திரிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ-7 ஆகும்.

8) தீர்ப்பு நகல் கணினி பதிவிறக்கம் ம.சா.ஆ.8 ஆகும்.

9) களக்காடு பார்வதி நர்சிங் ஹோம் மருத்துவமணையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவமணை மொத்த இரசீது ரூ.1,03,100 ம.சா.ஆ-9 ஆகும். (2 ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

10) களக்காடு பார்வதி நர்சிங் ஹோம் மருத்துவமணையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவமணை இரசீதுகள் மற்றும் மெடிக்கல் பில்கள் ரூ.24,211 (பில்களின் எண்ணிக்கை - 21) ம.சா.ஆ-10 ஆகும். (2 ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

11) களக்காடு பார்வதி நர்சிங் ஹோம் மருத்துவமணையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான சிகிச்சை விடுப்பு ஆவணம் ம.சா.ஆ-11 ஆகும்.

12) எனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.12 ஆகும்.

13) எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் ம.சா-ஆ.13 ஆகும்.

மனு படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-5 ல் மோட்டார் வாகனத்திற்கு எந்த சேதாரமும் இல்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ-6 ன் மோட்டார் சைக்கிளில் முன்பக்க முகப்பு விளக்கு மற்றும் இரண்டு இன்டிகேட்டர் விளக்குகள் சேதாரம் ஆகி உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது போல் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரே வந்த

காரை கண்டு பயந்து விபத்து நடந்ததாக கூறப்பட்டுள்ள இடத்தின் அருகே உள்ள மின் கம்பத்தில் மோதியதால்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் ம.சா-ஆ.4 ல் ரோட்டு ஓரத்தில் மின்கம்பம் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ-3 லும் ரோட்டு ஓரத்தில் மின்கம்பம் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். நான் கல்யாண வீடுகள் மற்றும் சடங்கு வீடுகளில் சமையல் வேலை செய்வேன் என்றால் சரிதான். மேற்படி வேலை வருடம் முழுவதும் இருக்காது என்றால் சரியல்ல. வேலை இல்லாத நாட்களில் சந்தை மற்றும் வியாபாரத்திற்கு செல்வேன். மாதம் ரூ.50 ம் வருவதாக நான் சொல்லியுள்ளதில் எனது வருமானத்தை காண்பிப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு அதிகம் பெறுவதற்காக வருமானத்தை மிகைப்படுத்தி காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து முழு ஆரோக்கியத்துடன் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. வேறு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றேன். நான் ஊனத்தின் விழுக்காடை அளவீடு செய்வதற்கு மருத்துவ குழுவிடம் ஆஜர் ஆகவில்லை என்றால் சரிதான். காயம் காரணமாக எனக்கு எந்த நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்பதால் நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு எதாவது இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் காப்பீடு விதிகளின் படி

2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை கவனமாக ஓட்டி வந்தார் என்றாலும் நான் கவனக்குறைவாக அருகில் உள்ள மின்கம்பத்தில் மோதிவிபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல.